00159

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
இயற்கை விஞ்ஞானங்களின் பீடம்
விஞ்ஞானமாணி பட்ட கற்கைநெறி

துறை	: தாவரவியல்
மட்டம்	: 03
பரீட்சையின் பெயர்	: இறுதிப் பரீட்சை
பாடத்தின் பெயர்	: விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பத்திலும் ஒழுக்கவியல்
பாடத்தின் குறியீடு	: FNU3200/ PCU1101
கல்வியாண்டு	: 2019 / 2020
திகதி	: 22.10.2020
நேரம்	: 9.30 – 11.30 am
காலம்	: இரண்டு (02) மணித்தியாலம்

பதிவு இல. :..... சுட்டெண் :.....

பொது அறிவுறுத்தல்கள்

1. எல்லா அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்த பின் வினாக்களுக்கு விடையளிக்குக.
2. இவ்வினாப் பத்திரமானது (02) இரு பக்கத்தில் (06) ஆறு வினாக்களைக் கொண்டது.
3. ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்குக. எல்லா வினாக்களும் சமமான புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது
4. ஒவ்வொரு வினாவிற்கான பதில்களும் ஓர் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்.

1) சமீப காலமாக கொழும்பு நகரமானது 'அழகுபடுத்தல்' திட்டம் ('beautification' project) போன்ற பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான திட்டங்கள் மக்களை அவர்களின் வீடுகளில் இருந்து புலம்பெயர வைத்துள்ளது. ஆகவே, இவ்வாறான திட்டங்களின் மூலம் ஏற்படக்கூடிய ஒழுக்கவியல் தொடர்பான பிரச்சனைகளை (Ethical issues) இனங்கண்டு அவற்றை விளக்குக.

2) சமூகப்பிரச்சனைகள் தொடர்பாக ஒரு தனிநபரின் மனப்பான்மையைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.
எமது சமூகத்தில் ஒன்றிற்கொன்று முரணான மனப்பான்மைகளே எவ்வாறான சமூகப் பிரச்சனைகளின் தோற்றத்திற்குரிய காரணம் ஆகும். இவ்வாறான மாறுபட்ட மனப்பான்மைகள் மக்களின் மாறுபட்ட ஒழுக்கவியல் நிலைகளுக்கும் (ethical positions) இட்டுச்சென்றுள்ளன. முரணான மனப்பான்மைகளுக்கும் மற்றும் ஒழுக்கவியல் தொடர்பான பிரச்சனைகளின் தோற்றத்திற்கும் இடையிலான தொடர்புக்கு பொருத்தமான உதாரணங்களைத் தந்து அவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

3) (a) 'தெரிவிக்கப்பட்ட சம்மதம்' ('informed consent') எனும் பதத்தை வரையறுக்க.
(b) ஓர் தெரிவிக்கப்பட்ட சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதில் ஆய்வாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய இடையூறுகள் பற்றி விவாதிக்க.

4) பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

   a) பதிப்புரிமை மீறல்
   b) வணிக உரிமைக்குறி உரித்தாளருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள்
   c) இரட்டை விளைவு (double effect)

5) ஆக்க உரிமை அமைப்பானது (patent system) புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பதற்காக அவ்வாறான கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்துவதற்கான பிரத்தியேக உரிமையை வழங்குவதும், அவற்றின் மூலம் ஏற்படும் சமூக அனுகூலங்களை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

   a) இலங்கையில் ஒரு கண்டுபிடிப்புக்கான ஆக்க உரிமையைப் பெறுவதற்கான தேவை/கள் என்ன?
   b) ஒரு கண்டுபிடிப்புக்கான ஆக்க உரிமையைப் பெறுவதற்கான செயல்முறையை/களைப் பட்டியல் படுத்துக்க.

6) a) 'ஒழுக்கவியல்' எனும் பதம் எதை விளக்குகின்றது?

   b) ஒழுக்கவியலின் அடிப்படைக் கொள்கைகளைப்/தத்துவங்களைப் (basic principles) பட்டியல்படுத்துக்க.
   c) சமூக நல்லிணக்கத்தில் (social harmony) ஒழுக்கவியல் கொள்கைகளின்/ தத்துவங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்க.